# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-45/2023

Prosecution witness - PW 1

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி.ஹசராபீவி | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accued absent. Petition filed U/s.317 Cr.P.C and allowed)

06.02.2026- 01.20 PM

முதல் விசாரணை:-

1. நான் வாலிநோக்கம் கிராமத்தில் குடியிருந்து மீன்பிடி தொழில் செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். பட்டியல் சாட்சிகள் 2 மற்றும் 3 எனது மகன்கள்.

2. கடந்த 09.04.2023ம் தேதியன்று நானும் எனது மகன்களும் இரவு 09.45 மணியளவில் எங்களது வீட்டுக் கதவை காற்றுக்காக திறந்து வைத்துவிட்டு எனது மகன்களுடன் துாங்கிக்கொண்டிருந்தேன். எங்களது வீட்டு பீரோ திறப்பு சத்தம் கேட்டது. உடனே நாங்கள் எழுந்து பார்த்தபோது எதிரி சதாம் உசேன் எங்கள் பீரோவில் வைத்திருந்த ஒரு பவுன் தங்கச்செயினை எடுத்துக்கொண்டிருந்தார். நாங்கள் எழுந்து பார்த்தவுடன் அவர் எங்களிடமே திருப்பி தந்து விட்டார். அந்த நேரத்தில் எனது கணவர் கடற்தொழிக்கு சென்றிருந்தார். அவரிடம் நான் தகவல் சொன்னேன். அவர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்குமாறு சொன்னார்.

3. அதன் பிறகு மறுநாள் 10.04.2023ம் தேதி வாலிநோக்கம் காவல் நிலையம் சென்று நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் மனு கொடுத்தேன். நான் கொடுத்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் மேற்சொன்ன தகவல்களை தான் சொன்னேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>**

எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை இல்லை.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.02.06 22:42:49 +0530